www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**11 R** Register No: 11704

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

மணி: 1:30 **தமிழ்** மதிப்பெண்கள்: 50

## பகுதி -I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 6 x1=6

1. "பாயிரம் இல்லது _______ அன்றே
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. 'வான் பொய்த்தது'- இச்சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
3. பகுபதத்தின் உறுப்புகள் _______
   அ) 5 ஆ) 4 இ) 6 ஈ) 3
4. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுவவர்
   அ) பாரதியார் ஆ) அண்ணாமலையார்
   இ) முருகன் ஈ) பாரதிதாசன்
5. ஒப்புரவு என்பதன் பொருள்
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
   இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
6. மொழி + ஆளுமை
   அ) உயிர்+உயிர் ஆ) உயிர்+மெய்
   இ) மெய்+உயிர் ஈ)மெய்+ மெய்

## பகுதி - II

### பிரிவு - I

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** 4 x 2 = 8

7. இனம்,மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
8. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக
9. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
10. மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?
11. "வளருங் காவில் முகில்தொகை ஏறும்" - இத்தொடரின் பொருள் கூறுக.

### பிரிவு - 2

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** 4 x 2 = 8

12. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
    அ) காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஆ) காலத்துக்கேத்த மாறி புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

13. கலை, களை, கழை- மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்தெழுதுக.

14. கலைச்சொற்களுக்கு ஏற்ற தமிழ் சொற்கள் எழுதுக.
அ) Earth environment ஆ) Journalist

15. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

16. பகுபத உறுப்பிலக்கணம் தருக (ஒன்றுக்கு மட்டும்)
அ) ஈன்ற ஆ) அலர்ந்து

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக 2 x 4 = 8

17. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக

18. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம் சுட்டி பொருள் விளக்குக.

19. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூகநிகழ்வுகளை வெள்ளிவீதியாரின் குறுந்தொகைப் பாடல்வழி விளக்குக.

### பிரிவு - 2 2 x 4 = 8

20. வேற்றுமையணி (அ) உவமையணியைச் சான்றுடன் விளக்குக

21. பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது) தமிழாக்கம் தருக
அ) A picture is worth a thousand words
ஆ) Knowledge rules the World
இ) culture does not make people people Make culture
ஈ) In nature light creates the colour in the picture colour creates the light

## பகுதி - IV

கீழ்க்காணும் வினாவிற்கு விடை தருக 1 x 6 = 6

22. நன்னூல் பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளை தொகுத்துரைக்க (அல்லது) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

## பகுதி -V 4 + 2=6

23. அடி பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. (மனப்பாடப் பகுதி)
அ) "ஏடு தொடக்கி வைத்து" எனத்தொடங்கும் யுகத்தின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'செயல்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com